# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.

## O.P. No. 44 /2020 RW2

23.07.2025 **எ.ம..சா.2 ஜெகதீஸ் அமுல்ராஜ் சத்திய வாக்குமூலத்தின் பேரில் மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை -**

நானும், எதிர்மனுதாரரும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நானும், ஜாக்குலின் ஜான்சி ராணியும் உறவினர்கள் என்றால் சரிதான். எதிர்மனுதாரரின் அம்மாவும், அப்பாவும் எனக்கு சித்தி, சித்தப்பா உறவுமுறை ஆகும். ஆகவே, எதிர்மனுதாரர் எனக்கு தங்கை உறவு ஆகும். எனது வீட்டிற்கும், எதிர்மனுதாரரின் வீட்டிற்கும் இடையே சுமார் 200 மீட்டர் தூரம் இருக்கும் என்றால் நான் வேட்டவலம் அரசு மருத்துவமனையின் முன்புறம் வசித்து வருகிறேன். எதிர்மனுதாரர் மருத்துவமனையின் பின்புறம் வசித்து வருகிறார். என்னுடைய நிருபண வாக்குமூலத்தின் முதல் பக்கம் 2ம் பத்தியில் இந்த வழக்கு மனுதாரரால் விவாகரத்து கேட்டு தாக்கல் செய்யப்பட்ட IDOP 2/2017 வழக்கு 2018ல் தள்ளுபடி ஆனது என சொல்லியுள்ளேன் ஆனால் என்ன காரணத்திற்காக அவ்வாறு தள்ளுபடி ஆனது என்று தெரியுமா என்றால் தெரியாது. அந்த மனுவானது எதிர்மனுதாரர், மனுதாரரின் ஊரான நங்காத்தூரில் வந்து சேர்ந்து வாழ்வதாக சம்மதம் தெரிவித்ததின் பேரில் சமரசம் ஏற்பட்டு அதன் பேரில் தள்ளுபடி ஆனது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது ஆனால் எதிர்மனுதாரர் நங்காத்தூர் சென்று மனுதாரருடன் வாழ்ந்தது தெரியும். மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் பிறந்த 3 குழந்தைகள் வேட்டவலத்தில் உள்ள ஒரு பள்ளியில் படித்தார்கள் என்றால் இரண்டு பேர் படித்து முடித்து விட்டார்கள், ஒருவர் இன்றும் படித்து வருகிறார். எதிர்மனுதாரரும், மனுதாரரும் வேட்டவலத்தில் எத்தனை வருடமாக ஒன்றாக வசித்து வந்தார்கள் என்று கேட்டால் சுமார் 10 முதல் 12 வருடங்கள் ஒன்றாக வசித்தார்கள். எதிர்மனுதாரர் வேட்டவலத்தில் தற்போது வசித்து வரும் வீட்டின் இடமானது எப்போது வாங்கப்பட்டது என தெரியுமா என்றால் தெரியாது. எதிர்மனுதாரருடன் 3 சகோதரர்கள், 1 சகோதரி உடன்பிறந்தவர்கள் ஆவார்கள். அவர்களில் மூத்த சகோதரர் இறந்து விட்டார். 3 சகோதரர்களின் குடும்பமும் ஒரே வீட்டில் தான் வசித்து வருகிறார்கள். அவர்களுக்கென்று தனித்தனி வீடு ஏதும் கிடையாது. எந்த வருடத்தில் எதிர்மனுதாரர் பி.எட்., படித்தார் என்று எனக்கு வருடம் தெரியுமா என்றால் தெரியாது. செவிலியர் படிப்பை எந்த வருடம் எதிர்மனுதாரர் படித்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. திருமணத்திற்கு முன்பாக எதிர்மனுதாரர் செவிலியர் படிப்பு மட்டும் தான் படித்தார் என்றும், திருமணத்திற்கு பிறகு தான் எதிர்மனுதாரரை மனுதாரர் பி.ஏ., பி.எட். படிக்க வைத்தார் என்றால் சரியல்ல. எனது நிருபண வாக்குமூலத்தின் 2ம் பக்கம் 3ம் பத்தியில் நான் சொன்னது போல எதிர்மனுதாரரின் கடினமாக முயற்சி, தளராத உழைப்பினாலும், திருவண்ணாமலை மாவட்ட சுகாதர துறையில் செவிலியர் உதவியாளராக பணியில் சேர்ந்தார் என்பது தவறு என்றும், மனுதாரரின் மிலிட்டரி கோட்டாவில் தான் எதிர்மனுதாரருக்கு வேலை கிடைத்தது

என்றால் தவறு. எதிர்மனுதாரருக்கு மிலிட்டரி கோட்டாவில் தான் பணி கிடைத்தது என்றும், நான் வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரரின் தாயார் வயோதிக காலத்தில் எந்த ஊரில் இருந்தார் என்று என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எத்தனை ஆண்டுகள் அவ்வாறு எதிர்மனுதாரரால், மனுதாரரின் தாயார் பராமரிக்கப்பட்டு வந்தார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேலும் எந்த மருத்துவமனையில் மனுதாரரின் தாயார் அனுமதிக்கப்பட்டார் என்றும் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய நிருபண வாக்குமூலத்தின் 2ம் பக்கம் 4ம் பத்தியில் மனுதாரர் குடிபழக்கத்திற்கும், பெண்களோடு தவறான உறவுக்கும் அடிமையாகி குடும்பத்தை சரியாக நடத்தவில்லை என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் எந்த வருடம் அவ்வாறு மனுதாரர் நடந்து கொண்டார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த பெண்ணுடன் தவறான உறவு வைத்திருந்தார் என்று நான் நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான், ஆனால் எந்த பெண் என்று எனக்கு தெரியும். எதிர்மனுதாரர் வேட்டவலம் காவல் நிலையம், நங்காத்தூர் மற்றும் வேட்டவலம் கத்தோலிக்க கிறித்துவ பங்கு தந்தையிடம் கொடுத்துள்ளதாக சொல்லும் மனுவில் மேற்படி மனுதாரர் தவறாக உறவு கொண்ட பெண்ணின் பெயரை எதிர்மனுதாரர் சொல்லியுள்ளாரா என்று கேட்டால் சொல்லவில்லை. ஆனால் நேரடியாக பஞ்சாயத்து செய்யும் போது சொன்னார். வேட்டவலம் காவல் நிலையத்திலோ, வேட்டவலம் கத்தோலிக்க கிறித்துவ பங்கு தந்தையிடம் கொடுத்துள்ளதாக சொல்லும் புகார் மனுக்களை என் தரப்பில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த பெண் யார் எந்த கிராமத்தைச் சேர்ந்தவர் என்று என் வாக்குமூலத்தில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்மந்தப்பட்ட பெண்ணை அழைத்து காவல் நிலையத்திலோ, வேட்டவலம் கத்தோலிக்க கிறித்துவ பங்கு தந்தையோ விசாரித்தார்களா என்றால் அந்த பெண்ணை அழைத்து விசாரிக்கவில்லை. ஆனால் அந்த பெண்ணின் பெற்றோரை மட்டும் பங்கு தந்தை அழைத்து விசாரித்தார். அந்த பெண்ணின் தந்தை பெயர் சின்னப்பன், தாயார் பெயர் செலபாங்கி ஆகும். அந்த பெண் பெயர் எனக்கு நியாபகம் வரவில்லை. ஆனால் அந்த பெண்ணின் சொந்த ஊர் ஆதிச்சனூர், ஆனால் அவர் அவரது அம்மா ஊரான வேட்டவலத்தில் வந்து தங்கி விட்டார். (வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.